ஊழியர்களின் வழிகாட்டி

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

ஹிந்தியில் எழுதியவர்

ஸ்ரீ ராம்நாத்சுமன்

தமிழாக்கியவர்

ஸ்ரீ எஸ். என். ராமச்சந்திரன்

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

Univ. Grants Commission

விற்பனை உரிமையாளர்

தமிழ்ப் பண்ணை

தியாகராயநகர் :: மயிலாப்பூர்

சென்னை

முதற் பதிப்பு
1946 மார்ச்

விலை
அணா 12

குடிசைத்தொழில் வெளியீடு

கபீர் அச்சுக்கூடம், திருவல்லிக்கேணி, சென்னை
குடிசைத் தொழில் வெளியீடு—Ms. 92

ஸ்ரீ ராம்நாத் சுமன்

இப் புத்தகத்தின் ஆசிரியர் ஸ்ரீ ராம்நாத் சுமன் ஹிந்தி மொழியில் தேர்ந்த வசன எழுத்தாளர்களில் ஒருவர். கதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள், வாழ்க்கைச் சரிதங்கள், ஆராய்ச்சிகள், அரசியல் கட்டுரைகள் முதலிய பகுதிகளின் அரசர் எனக் கருதப்படுபவர். தான் எழுதும் நபர்கள், கவிகள், விஷயங்கள் ஆகியவைகளை நன்கு ஆராய்ந்து உள்ளது உள்ளபடியே எழுதுபவர் எனப் பிரசித்தி பெற்றவர். இருபதாம் நூற்ருண்டில் ஹிந்தி மொழியில் தோன்றிய இரண்டு மாணிக்கங்களான ஸ்ரீ ஜயசங்கர் பிரஸாத், மைதிலீ சரண் குப்த் என்ற கவிஞர்களின் கவிதையை ஆராய்ந்து இவர் எழுதிய "கவிபிரசாத் கீ காவ்ய-தாரா" "குப்தஜீ கீ காவ்ய-தாரா" என்னும் இரு புத்தகங்களும் மிகவும் உயர்ந்தவை என எல்லோராலும் போற்றப்படுகின்றன. அப் புத்தகங்களை தென் நாட்டிலிருந்து வடநாடு வரை உள்ள ஹிந்தி மொழி தெரிந்தவர்கள் எல்லோரும் படிக்கிருர்கள். அவைகளைக் கலந்துகொண்டு அக் கவிகளைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிருர்கள் என்ருல், அவர் எழுத்தின் தன்மையைக் குறித்து அதிகம் சொல்லத் தேவையில்லை.

அலகாபாத்திலுள்ள ஸாதனு—ஸதன் என்னும் புத்தக நிலையத்தின் அதிபர் இவர். உயர்ந்த புத்தகங்களை வெளியிடும் அந்த ஸ்தாபனத்தின் மூலமாய் அவர் தன் தாய் மொழிக்குப் பெரும் சேவை செய்து வருகிறார்.

இப்புத்தகம் அவர் எழுதி வெளியிட்ட 'ஹமாரே நேதா' (நம் தலைவர்கள்) என்னும் புத்தகத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. அதில் அவர் கையாண்டிருக்கும் முறை மிகத் தேர்ந்ததும் அழகும் கொண்டதாகும். ஒவ்வொரு தலைவராக எடுத்துக்கொண்டு அவர்கள் வாழ்க்கையைச் சொல்லுகிறார். சம்பவங்களைக் கொடுக்கிறார். பிறகு ஆராய்ச்சி எனத் தலைப்புக்கொடுத்து மனோதத்துவ சாஸ்திரப்படி அவர்களுடைய போக்குகளையும் அவற்றின் காரணங்களையும் துருவித் துருவிக் கடைசியில் கண்டு பிடிக்கிறார். பிறகு தன் கதாநாயகனிடம் தோன்றும் குண விசேஷங்களையும் குறைபாடுகளையும் வெளிப்படுத்துகிறார். இவ்வெல்லாவற்றின் அடியில் தன் கதாநாயகனின் தோற்றத்தை மறைப்பதே யில்லை. முன்னுலேயே வைத்து ஒவ்வொரு விஷயமாக ஆராய்கிறார். நம்மையும் முடிவு கட்டச் செய்கிறார். இம் முறையின் அழகையும் ஆழத்தையும் வாசகர்களே கண்டு கொள்ளலாம்.

நான் அனுமதி கேட்டபோது மனமுவந்து மொழி பெயர்க்க அனுமதி கொடுத்ததோடல்லாமல் இப் பதிப்

பிற்கென்றே ஒரு விசேஷ முன்னுரையும் எழுதித் தந்த மூல ஆசிரியர் ஸ்ரீ ராம்நாத் சுமன் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இம் மொழிபெயர்ப்பு முழுவதையும் படித்து என் அலங்கோலத் தமிழைச் செதுக்கிச் செப்பனிட்டுக் கொடுத்த நாமக்கல் கவிஞருக்கும் தமிழ்ப் பண்ணை நிர்வாகி ஸ்ரீ சின்ன அண்ணாமலை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அனுமதி யில்லாமல் தன்னைப் பற்றிய சரித்திரத்தை வெளியிட்ட என் குற்றத்தைக் கதாநாயகனும் மன்னிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

—எஸ். என். ராமச்சந்திரன்.

ஒரு சில வார்த்தைகள்

[தமிழ் பதிப்பிற்காக ஆசிரியர் எழுதியது]

தமிழ் பேசும் மக்களுக்காக நான் எழுதிய ராஜாஜீயின் வாழ்க்கைச் சித்திரம் தமிழில் வெளியிடப்படுகிறதென அறிந்து மிகவும் மகிழ்வெய்துகிறேன்.

இந்திய அரசியல் உலகில் ராஜாஜீயின் பங்கு அற்புதமானது. அவரை வேறு எந்தத் தலைவருடனும் ஒப்பிட முடியாது. இந்திய அரசியல் கடலின் குமுறி எழும் அலைகளின் மத்தியில் விவேகம் என்ற பாறையில் நிற்கும் கலங்கரை விளக்கம்போல் நம்மிடையில் நின்று நமக்கு நிரந்தரமாகப் பிரகாசம் கொடுத்துக் கொண்டிருக்கும் தலைவர் அவர் ஒருவரே. மலிந்த உணர்ச்சிப் புயல் அவரை அசைக்க முடியாது. கோஷங்களின் மேல் நீந்தும் அரசியலின் செப்பிடுவித்தைகள் அவரை வழியினின்று அசைக்க முடியாதனவாயிருக்கின்றன. அவர் ஒரு பொழுதும் ஜனங்களின் உணர்ச்சியைத் தூண்டுவதில்லை. எப்பொழுதும் அவர்களின் விவேகத்தைத் தூண்டவே முயற்சிக்கிறார். அவருடைய மேதை அரசியலின் ஆக்க வழிகளைக் காண்பித்து அவ்வழி செல்லும்படி தூண்டுகிறது.

அவரால் மக்களுக்குப் போதை ஊட்ட முடியாது என்பதே கஷ்டமான விஷயம்; அவர் அவர்களின் போதையை

விலக்கித் தத்துவத்தின் உறுதியான பாதையில் செல்லும் படி மக்களை அழைக்கிருர். பலன் என்னவாயினும் சரி, ஜனங்களுக்குப்பிடித்திருக்கிறது, என்பதற்காக அவர் ஒரு விஷயத்தையும் சொல்லமாட்டார். இதனுல்தான் அவர் மக்கட் கூட்டங்களில் செல்வாக்குப் பெறவில்லை. கூட்டத்தைத் தலைமை வகித்து நடத்துவதில் அவருக்குச் சமார்த்தியம் போதாது. மனித சமூகத்தின் தலையெழுத்தை உணர்ச்சிகளுக்கு அர்ப்பணம் செய்ய மாட்டார். மற்றவர்கள் அப்படிச் செய்வதை பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டார். அடிமைப் பட்டிருக்கும் நாட்டின் மக்கள், அடிமைத்தனத்தின் பாரத்தைத் தாங்க முடியாமலிருக்கும் மக்கள், ஆள்வோரின் மேல் ஆழ்ந்த வெறுப்பும் சினமும் கொண்டிருக்கும் மக்கள், இயற்கையாகவே அவர்களின் உணர்ச்சிக்கு உணவூட்டும் சுதந்திரத்திற்காக அவர்களை வெறி கொள்ளச் செய்யும் தலைவர்கள்பேரில் வெறும் பைத்தியம் கொள்ளுகிருர்கள். ராஜாஜீயின் அமைதியான, ஆராய்ச்சி நிரம்பிய வார்த்தைகள் அவர்கள் காதுகளில் சென்று அறிவைத் தட்டுகின்றன. ஆனுல் இருதயத்தில் பிரவேசிப்பதில்லை. இன்று மக்கள் தன் விவேகத்தின் கதவுகளை அடைத்துக் கொண்டிருக்கிருர்கள். உணர்ச்சி அலையில் விளையாடிக்கொண்டு மகிழ்ச்சி கொள்ளுகிருர்கள். இதற்கு நேர் எதிராக ராஜாஜீ உணர்ச்சியின்மேல் அமர்ந்திருக்கும் அங்குசத்திற்கு அடையாளமாயிருக்கிருர். அவரிடம் உபநிஷதகால முனிவரின் தியாகமும், தாராளத்வமும், சாணக்கியனின் மேதை, வேகம், இரண்டும் உயர்ந்த ராஜதந்திரம் ஆகியவற்றின் அற்புதக் கலப்பு பரிணமிக்கிறது.

நாம் விரும்பும் சுதந்தரத்திற்குக் குறிப்பாகக் காந்திஜீ விரும்பும் சுதந்தரத்தைப் போன்றதற்கு, ஆழ்ந்த ஆத்ம சோதனை, உயர்ந்த மனம், உறுதியான தவம், மேலும் கூர்ந்த ஆராய்ச்சி நோக்கு ஆகியவைகள் அவசியமாகும். நாம் ராஜாஜீயின் அபிப்பிராயத்தோடு சம்மதித்தாலும் சம்மதிக்காவிட்டாலும், அவருடைய ஆராய்ச்சி, பிளந் தெறியும் கூர்ந்த திருஷ்டி, கொள்கையில் கொண்ட பற்று, இவைகளால் தேசத்திற்கு ஏற்படும் நன்மைகள் கிட்டாதவாறு தேசத்தை வஞ்சிப்பது தேச சேவை யாகாது. இந்திய சுதந்திரம் சமீபித்திருக்கும்பொழுது, அது கிட்டும் கனியாகத் தோன்றும் பொழுது, இந்திய சுதந்தர சர்க்காரை நிர்மாணிப்பதில் காந்தீஜீயின் வழி காட்டுதலும், ஜவாஹர்லால்ஜீயின் விசாலமானதும் தாராளமானதுமான முன்னுரையும், ராஜாஜீயின் ஆராய்ச்சி, ஜாக்கிரதை, அறிவு இவைகள் கலந்து ஒத்துழைத்தால் அது இத்தேசத்திற்கு மட்டுமல்ல, மனித ஜாதி முழுவதிற்குமே நன்மை பயக்கும்.

ராஜாஜீயைச் சரியாய் அறிந்து கொள்வதில் இச்சிறு புத்தகம் உதவியாயிருக்க வேண்டும் என்பதுவே என் விருப்பம்.

ஸாதனா - ஸதன்
அலகாபாத்
31—1—1946.

ராம்நாத் சுமன்.

ஓ, ரத்தினமே! குரங்கு உன்னை எடுத்தது. மோந்து பார்த்தது. தன் வழக்கம்போல் முத்தமிட்டுப் பிறகு நக்கியும் பார்த்தது.

பாவம்! அதற்கொன்றும் விளங்கவில்லை. தூர எறிந்து விட்டது.

நீ ஏன் வருந்தவேண்டும், "என் மதிப்புக் குரங்கிற்குத் தெரியவில்லையே என்று?" 'உள்ளே என்ன இருக்கிறது?' என்று கல்லில் வைத்துத் தட்டிப் பார்க்காமல் இருந்ததினால் நீ உண்மையாகச் சந்தோஷிக்கவேண்டும்."

—ஒரு சமஸ்கிருதக் கவி.

"ராஜாஜீயினுடைய மிகவும் தெளிவான புத்தி கூர்மையும் தன்னலமற்ற நன்னடத்தையும்-எவ்வளவு சிக்கலான விஷயத்தையும் ஊடுருவி அலசி ஆராய்ந்துவிடக் கூடிய அபார சக்தியும் நம்முடைய இயக்கத்திற்கு மிகவும் உயர்ந்த பொக்கிஷங்களாக உதவி வந்திருக்கின்றன."

—ஜவாஹர்.

தெளிந்த அறிவும்-சிக்கலற்ற சிந்தனை சக்தியும் கொண்ட ஒரு மனிதர்—ராஜாஜீ—எங்கள் கூட்டத்திலிருக்கிறார்.

—வல்லபாய் படேல்.

மகாத்மாஜீயின் பலமும் வேலைத் திறனும் வல்லபாய் படேல். சேவையும் வினயமும் ராஜேந்திர பாபு. மூளையும் தத்துவ ஞானமும் ராஜாஜீ.

—ஒரு அறிஞர்.

வல்லபாய் அதிகாரி. புலாபாய் கண்காணிப்பாளர். ராஜாஜீ கணக்காளர். ராஜாஜீ எதிரியின் மனதிலுள்ளதை அப்படியே ஒரு மந்திரவாதியைப்போல் படித்து விடுகிருர். அவர்கள் நடமாட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்து அவர்களைத் தோற்கடிப்பதில் அவர் தவறுவதேயில்லை. எதிரியின் ஆயுதச் சாலையிலுள்ள பலவீனமான பாகங்களைக் கண்டுபிடிப்பதில் அவரிடம் ஒரு அபூர்வ திறமையைக் காண்கிருேம்.

—டான். பம்பாய்.

யாராவது மகாத்மாஜீயிடம் அவருடைய அத்யந்த சிஷ்யர்களில் உயர்ந்த யோக்யதையும் திறமையும் நற்குணங்களுங் கொண்ட அறுவர் பெயரைக் கேட்டால் அவர் எவ்விதத் தயக்கமுமின்றி ராஜாஜீயின் பெயரை அவ்வறுவரில் ஒருவராகச் சொல்லுவார். ராஜாஜீ உண்மையில் அதிபுத்திசாலி-அறிவுத் தெய்வம் அவருடை புத்தித் தெளிவு மிகப் பிரசித்தமானது. ஒரு சக்தியுள்ள பிரசங்கி, கரைகண்ட அறிவாளி, பெரும் சம்மட்டி அடியைப்போல் வடுபடுத்தும் நடை, குற்றங்களை பிளந்து துண்டு துண்டாக்கும் அவர் பேச்சு வன்மை முதலியன எல்லோரும் கண்டு பொருமைப்படும்படியான விஷயங்கள். அவர் ஒரு அற்புத அரசியல் வாதி. சூட்சும திருஷ்டி கொண்ட தேசபக்தன். அவருடைய சரளமும், உண்மையும் தியாகமும் 'பழமொழி' யொப்ப பாராட்டத் தக்கவை.

—புரொபஸர் அப்துல் ஹமீத்.

[லாகூர் ட்ரிப்யூனில் அவருடைய சுற்றுப் பிரயாணத்தை எதிர்த்து எழுதிய ஒரு கட்டுரையிலிருந்து எடுத்தது.]

ராஜாஜீ

"எனது மதிப்பிற்குரிய தலைவரும்—உலகத்தில் அரை டஜன் அறிஞர்களைப் பொறுக்கினால் அவர்களில் ஒருவராக இருக்கக்கூடியவர் என்று பிரபல எழுத்தாளர் ஒருவரால் புகழப்பட்டவரும்—விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய நூற்றுக்கணக்கான மாபெருந் தியாகிகளில் தலை சிறந்தவரும்-என் போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தலை வணங்கத் தக்கவரும்—பதினாயிரக் கணக்கான மக்கள் கண்ணை மூடிக்கொண்டு பின் பற்றக் கூடியவரும்—லட்சக்கணக்கான இந்திய மக்களின் உள்ளத்தில் சுதந்தர ஜோதியை ஏற்றிவைத்து ஆர்வத்தை வளர்த்தவரும்—கோடிக்கணக்கான இந்திய மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாகிய காங்கிரஸ் மகாசபை இவ்வளவு பலம் பொருந்திய ஸ்தாபனமாவதற்கு முக்கிய உறுப்பினரானவருமாகிய நமது ராஜாஜீ அவர்களைத் தூஷிக்கின்ற நாக்குப் புண்ணாக்கு. அவரை வணங்காத தலை தருதலை."

—செய்யாறு தாலூகா அரசியல் மகாநாட்டில்

சின்ன அண்ணாமலை

தமிழ்ப் பண்ணையாளர்.

ராஜாஜீக்கு எதிராகக் கூடும் கும்பல் பகலில் கூடும் ஆந்தைகள் போலவும் இரவில் கூடும் காக்கைகள் போலவும் அலங்கோல மடையுமென்பதில் சந்தேகமில்லை.

—**ஒரு கவிஞர்**

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

ஊழியர்களின் வழிகாட்டி

ஒரு மெலிந்த குட்டையான மனிதர். மழுங்க க்ஷவரம் செய்த தலை. அதில் ஆர்ய நாகரிகத்தின் கொடியே போல் ஒரு சிறிய குடுமி. பள்ளங்களுக்குள்ளிருந்து எட்டிப் பார்ப்பதுபோன்ற கூர்ந்த கண்கள். கருப்புக் கண்ணாடிகள். அவைகளின் நடுவே கழுகு மூக்கு போல் நிமிர்ந்தெழுந்த நீண்ட மூக்கு. சிறிது வளைந்த தோள்கள். வெண்ணைபோல் தூய கதராடை. மேலே ஒரு மடித்த துப்பட்டா. கால்களில் சாதாரணச் செருப்பு — இவர்தான் சக்கரவர்த்தி ராஜகோபாலாச் சாரியார்! இவரைத் தான் நாம் மரியாதையுடனும் அன்புடனும் ராஜாஜீ என அழைக்கிறோம்.

முதல் தடவை இவரைப் பார்க்கிறோம், மறக்கிறோம். பராக்காகப் பார்ப்பவர்களுக்கு விசேஷமாகத் தோன் றும்படியோ — அவர்களுடைய கவனத்தை இழுக்கக் கூடிய கவர்ச்சியான தோற்றமோ ஒன்றும் இல்லைதான். இருந்தாலும், இம்மனிதரிடம் வேறு ஏதோ ஒன்று இருக்கிறது — ஏதோ ஒன்று என்ன — நிரம்ப இருக் கிறது. சரீர லக்ஷண சாஸ்திரி இம்மனிதரின் முக அமைப்பைப் பார்த்ததுமே சொல்லிவிடுவான்.

இம் மனிதரிடம் விசால புத்தி தெரிய முடியாமலிருக்க லாம். ஆனால் அவருடைய கூரிய பார்வையை யாரும் தப்பமுடியாது. அவருடைய நீண்டு வளைந்த மூக்கும், அதன் இருபுறத்திலும் ஆழத்திலிருந்து உங்களைக் கூர்ந்து நோக்கி உங்கள் மர்மமான எண்ணங்க ளிருக்கும் இடம் வரை ஊடுருவிச் சென்று அவைகளை ஆராய்ந்துவிட்டே திரும்பும் கண்கள்! இவையெல் லாம் சரியாகக் கவனித்தவர்கள் மறக்கக்கூடியவை யல்ல. அவர் உதடுகளில் தவழும் புன்னகையில் விரோதியை — ஏன், உலகையே நோக்கிச் சவால் விடுவதுபோன்ற ஒரு தீவிரமானதும் வெளிப்படை யானதுமான கேலி இருக்கிறது.

அந்தப் புன்னகை "எங்கே அப்பா இருக்கிறாய்?" என்று விரோதிகளையும் கேட்கிறது. இந்தக் கேள்விக்கு பதிலும் அந்தப் புன்னகையே சொல்லிவிடுகிறது: "நான் தெரிந்து கொண்டேன்—சமயம் வரட்டும் — நான் என்ன தெரிந்துகொண்டேன் என்பதைப் பின்னால் அறிவாய்!" என்று.

ராஜாஜீயை நான் அநேகம் தடவை பார்த்திருக் கிறேன். அவர் பேச்சுக்களை கேட்டுமிருக்கிறேன். சிறு கோஷ்டிகளுக்குள் எவ்வளவு பேசக் கேட்டிருக் கிறேனோ அவ்வளவு, மேடைகளில் பேசக் கேட்ட தில்லை. அவர் விஷயங்களை வெளியிட்டுப் பேசும் பொழுது என் புத்தியும் மனமும் அவரை அளக்கவும்

நிறுத்துப் பார்க்கவும் முயற்சி செய்திருக்கின்றன. அவருடைய மானசீகமான — சூட்சமமான சித்திர மொன்றை எழுத முயற்சித்திருக்கின்றன — ஆனால் எப்பொழுதும் அவர் மற்றவர் பிடிக்கு அகப்படாத மனிதர் என்றே உணர்ந்தேன். அவர் வாக்கில் அவர் இதயம் வெளிப்படுவதில்லை. வெளியில் வருவதைக் காட்டிலும் அதிகமான பாகம் உள்ளே ஆழத்தில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கிறது. வெளியில் வருவதுகூட அநேக முற்றுப் புள்ளிகள் முதலியவற்றுடன் ஒரு விசேஷ அர்த்தத்துடனே வருகிறது!

மெலிந்து வாடிக் கிடக்கும் இம்மனிதர் இந்தியராஜீய உலகில், மக்களுக்கு ஒரு புதிராகவும் அற்புதமாகவும் தோற்றமளித்துக் கொண்டிருக்கிறார்.

இன்று மலை உச்சியில்!

நாளை பள்ளத்தாக்கில்!

இன்று சன்யாசி!

நாளை அதிகாரத்தில் — பதவியில் நிற்கிறார்.

எப்படிப்பட்டவர் இம்மனிதர்?

2

இந்திய ராஜீய உலகிற்கு இரண்டு பெரும் ஜோதிகளைத் தந்த தமிழ் நாட்டின் சேலம் ஜில்லாவில் ராஜாஜீ 1879-ஆம் வருஷம் பிறந்தார். இந்தியாவின் பிரசித்தமான அரசியல் சட்ட நிபுணரும், ஒரு காலத்தில் 'இம்பீரியல் அசெம்பளி நெப்போலியன்' என வழங்கப்பட்டவருமான விஜயராகவாச்சாரியாரையும், புதுச் சந்ததிகளால் மறக்கப்பட்டு மறைந்து போன அந்தத் தியாகி – பேரும் புகழும் காத்துக் கிடந்த அரசியல் வாழ்க்கையை உதறிவிட்டு சந்நியாசம்கொண்ட அந்தச் சிங்கம் பி. வி. நரசிம்மையரையும் ஈன்றது இந்த ஜில்லா என்பதை நாம் மறந்திருக்க மாட்டோம். அந்த ஜில்லாதான் இன்று நமக்கு ராஜாஜீயையும் தந்திருக்கிறது.

ராஜாஜீயிடம் புத்தி கூர்மை ஆரம்பத்திலேயே வெளிப்பட்டது. பள்ளியிலும் காலேஜிலும் அவர் ஒரு மேதாவி எனக் கருதப்பட்டு வந்தார். தர்க்க சக்தி அபாரமாக இருந்ததால் அவருக்கு வக்கீல் தொழிலில் நோக்கம் சென்றது. சட்டப் பரீக்ஷையை முடித்ததுமே அவர் சேலத்தில் வக்கீல் தொழில் ஆரம்பித்தார். தொழிலும் நன்ருக நடந்து வந்தது. பொது ஜன சேவை ஆர்வமும் அவரிடம் சிறு வயதிலேயே இருந்தது. அதனுல் அவர் நகராண்மைப் பிரச்னைகளில் பற்றுக்கொண்டு அவைகளில் ஈடுபட்டார்.

வெகு விரைவில் நகரசபையின் தலைவரானார். (சேர்மன்) அக்காலத்தில் அவர் நகர சீர்திருத்தத்திற்குப் பாடு பட்டது கொஞ்ச நஞ்சமல்ல. சேலம் கோவாபரேடிவ் பாங்கின் ஸ்தாபகர்களுள் இவரும் ஒருவர். வைதீகத் திற்கெதிராக வாய்திறப்பதும் ஆபத்தாக இருந்த அந்தக் காலத்திலிருந்து இன்றுவரை சமூக சீர்திருத்த வேலைகளில் வெகு தீவிர பங்கெடுத்துக்கொண்டு வரு கிறார்.

ராஜாஜீயைப் போன்ற மேதாவி சேலம் போன்ற சிறு இடத்தில் எத்தனை நாள் அடைபட்டிருக்க முடியும்? சென்னைக்கு வந்து அங்கு வக்கீல் தொழில் ஆரம் பித்தார்.

1916 முடிந்துவிட்டது.

1917-ஆம் வருஷத்தோடு கூடவே தேசம் முழுவதிலும் ஒரு விழிப்பு ஏற்பட்டது. அன்னிபெஸண்டின் ஹோம் ரூல் இயக்கம் மனிதர்களுக்குள் ஒரு ஆவேசத்தை ஊட்டி வந்தது.

ராஜாஜீ அதிலிருந்து எப்படி விலகியிருக்க முடியும்? உண்மையில் ராஜாஜீயின் அகில இந்திய கீர்த்தி சென் னையிலிருந்து தான் ஆரம்பித்தது.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு இந்திய வானத்தில் — தேசத்தின் தோற்றத்தையே அடியோடு மாற்றிய அம் மனிதர் — இந்திய அரசியலை 'பிச்சை, கெஞ்சுதல்' என்

பவற்றின் வலையிலிருந்து விடுவித்து தியாகங்கள் மிகுந்ததும் கம்பீரமான சிந்தனைக்குரியதுமான விஷயமாகச் செய்த அம்மனிதர் — காந்தி தோன்றினர்.

1914 – 1919 யுத்தம் முடிந்துவிட்டது.

ஆங்கில ஏகாதிபத்யம் வெற்றியில் களிவெறிகொண்டு திரிந்தது.

ஆனந்தம் நிரம்பிய இவ்வேளையில் இந்தியாவின் சுதந்திரக் கோரிக்கையின் கரகரப்புச் சத்தம் கேட்டது. ஏகாதிபத்யம் வெகுண்டது.

அந்த வெருட்சியாலும் ஆத்திரத்தாலும் பஞ்சாபில் அது நடத்திய கோரக் கொலைக் காண்டமானது பல நூற்றுண்டுகளாகத் தூங்கிக் கிடந்த இந்தியாவின் ஆத்மாவைத் தட்டி எழுப்பியது.

மிதிக்கப்பட்டு — அடிக்கப்பட்டு — நசுக்கப்பட்டு — நகந்தேயும் மட்டும் சுரண்டப்பட்டு — அவமதிக்கப்பட்டு — மயங்கிக் கிடந்த நாடு — அமைதி நிரம்பிய சமுத்திரத்தில் 'குபீ'ரென எழும்பிய கடும் புயல்போல குமுறி எழுந்தது.

நெஞ்சில் சுதந்தரக் கனல் மூண்டது.

இந்திய மக்கள் பைத்தியம் பிடித்தவர்கள்போல் சுதந்தர ஜெபம் செய்ய ஆரம்பித்தனர்.

இவைகளெல்லாம் மந்திர ஜாலம்போல் தோன்றின.

மக்கள் ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

நெஞ்சினில் ஆர்வம்.

கண்களில் ஜோதி.

உள்ளத்தில் ஒரு கனவு.

எண்ணத்தில் ஒரு வேதனை.

இவற்றுடன் சுதந்தர தாகம் புதுபலங் கொண்டது — ராஜாஜீயின் தொழில் இச்சமயம் மிக நல்ல நிலையி லிருந்தது. வருஷம் 60000 ரூபாய்க்குக் குறையாமல் வந்துகொண்டிருந்தது. குடும்பபாரம் அதிகமாயிருந் தது. ஆனால் அவருள்ளம் அவரை மெள்ள மெள்ள தயார் செய்துகொண்டு வந்தது.

தன் வாழ்க்கைப் போக்குக்கும் லட்சியத்திற்கும் வெகு சமீபத்தில் சில சமயங்களில் ஒவ்வொரு மனிதனும் வருகிறான். அதைச் சரியானபடி அறிந்துகொண்டால் அவன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளமுடியும். ஆனால் அப்படிச் செய்வதில்லை. வாழ்க்கைச் சாவி எதிரில் வந்ததும் அதைப் பார்க்காமல் தன் வாழ்க்கையை வீணாக்குகிறான்.

ராஜாஜீக்கும் அந்த நேரம் வந்தது.

அகமும் புறமும் பரவிக் கிடக்கும் செல்வம் ஒரு பக்கம். தலைமைப் பதவி — சக்தி மற்றொரு பக்கம்.

இரண்டிற்குள் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டி யிருந்தது.

ராஜாஜீயினுள் மறைந்துகிடந்த அந்தத் தியாக உணர்ச்சி விழித்தெழுந்தது.

செல்வத்தையும் சுகத்தையும் உதறி எறிந்தார். தேசத்தின் விடுதலை வேள்வியில் குதித்தார். அன்றி லிருந்து இன்றுவரை அவர் அதோடு சேர்ந்தே இருக் கிறார்.

1921-ல் ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரின் இல்லத்தில் இந்தத் திறமையுள்ள வக்கீலும் (ராஜாஜீ) காந்திஜீயும் சந்தித்தனர். முதல் சந்திப்பிலேயே இருவரும் ஒருவரை யொருவர் அறிந்துகொண்டார்கள். ஏற்றுக்கொண் டார்கள். அன்றிலிருந்து அவர்கள் சம்பந்தம் நாளுக்கு நாள் பலமடைந்துவிட்டது. அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. ஆனாலும் அவர்கள் தொடர்பு அதனால் பாதிக்கப்படவில்லை.

அந்த நாள் முதல் ராஜாஜீ தேசத்தின் முக்கிய தலைவர் களில் ஒருவராயிருக்கிறார். வருஷக் கணக்காக மாறுதல் வேண்டாக் கட்சியின் பிரதான தலைவராகவும், காரியக் கமிட்டியின் அங்கத்தினராகவும் பல்வேறு நிர்மாணத் திட்டங்களின் உற்பத்தி கர்த்தாவாகவும் செயலாள ராகவும் இருந்திருக்கிறார்.

சென்னையின் பிரதம மந்திரியாகவும் இருந்தார். சிறிது நாள் முன்வரை காங்கிரசின் கடிவாளம் அவரிடமே யிருந்தது. யுத்தகாலத்தில் காங்கிரசின் கொள்கையோடு அபிப்பிராய பேதமேற்பட்டதால்

காங்கிரஸ் காரியக்கமிட்டியிலிருந்து விலகிக்கொண்டார். பிறகு காங்கிரஸ் முஸ்லீம் லீக் இவை யிரண்டும் சேர்ந்து வேலை செய்ய வேண்டுமென்ற கொள்கையை பிரசாரம் செய்து வந்தார்.

இவர் சுதந்தர இந்தியாவின் பிரதம மந்திரி ஆவதற்கு முற்றிலும் தகுதியுடையவர்.

ஆனல் !

கேள்வி இதுதான்.

கயாவுக்கும் இன்றுள்ள ரூபத்திற்கும் ! இவ்வளவு மாறுதல் எப்படி ஏற்பட்டது ?

கயைக் காங்கிரசின் அந்தக் காட்சி !

தேசபந்து, மோதிலால் போன்ற உரங்கொண்ட தலைவர்களுக்கு மத்தியில் — ஒரு மெலிந்த — கண்ணுடி அணிந்த மனிதர் எழுந்து நிற்கிருர். அவர் வாக்கில் அக்கினியில்லை.

மலையாற்றின் கரை புரண்டு வழியும் நீர் பெருக்கின் ‘ ஓ ’ வென்ற பேரிரைச்சலும் இல்லை.

கேலி — வம்பு நிறைந்த கூர்மையான தர்க்க பாணங்கள் — மழைபோல் பொழியப்படுகின்றன.

சட்டசபைக் கட்சியின் நிலைமை படுமோசமாகிக் கொண்டிருக்கிறது.

மோதிலால் பல்லைக் கடிக்கிருர்.

தேசபந்துவின் முகம் கோவைக்கனி போல் சிவந்து விட்டது.

இவர்களிடையே திடமும் அமைதியும் உருவெடுத்தாற்போல் – தண்பனிபோல் குளிர்ந்த – ஆனால் கல்லைக் காட்டிலும் உறுதியான தர்க்க பாணங்களை வீசிக் கொண்டே குறுநகை புரிகிறார்.

அந்த தாஸ் – மோதிலால் போன்ற அடக்கியாளும் சுபாவம் கொண்ட மனிதர்களை – தன்னுடைய கூர்மையான கேலியும் தர்க்கமும் நிறைந்த பேச்சினால் சிதறடித்த அந்த ராஜாஜீ எங்கு சென்றார் ?

சட்டசபைகளின் அந்தக் கடும் விரோதி – காலஞ் சென்ற தேசபந்துவினால் "மகாத்மாவின் மடாதிபதி" என்று அழைக்கப்பட்ட அவர் – சுயராஜ்யக் கட்சியின ரால் கடுமையாகத் தாக்கப்பட்டும் கூட அசைந்து கொடுக்காமல் மேலேறிய அந்த ஆத்மா – காங்கிரஸ் முழுவதிலும் தேசத்தின் அழியா ஆத்மாவையும் அதன் குமுறும் ஹுங்காரத்தையும் நிலை நிறுத்திக் கொண் டிருந்த அவர் – அங்கதனைப்போல் காலைப் பூமியில் தட்டி சுயராஜ்யக் கட்சியினரைப் பார்த்து, இங்கிருந்து நாங்கள் நகரமாட்டோம், நீங்கள் மாயையின் வலையில் விழப்போகிறீர்கள் என எச்சரித்தவரும் – தேசத்தின் உணர்ச்சியைத் தட்டி எழுப்பிக் கொண்டே சென்ற அந்தத் தன்னம்பிக்கை என்ற வேள்வியின் பூசாரி – ராஜகர்த்தா இன்று எங்கே ?

தேர்தலில் கடுமையாக ஈடுபட்டு — மந்திரிபதவியில் அமர்ந்தும் நிதானமாகப் பேசியவரும் — எல்லோரிலும் சிறந்த அஹிம்ஸையின் பிரயோகி, ஸாதகன் —மகாத்மா வோடு அதைப் பிரயோகிக்கும் விதத்தில் மாறுபட்ட அபிப்பிராய பேதங் கொண்டு — மாறுபட்ட கருத்தை துணிச்சலுடன் வெளியிடுபவருமான இந்த ஸி. ஆர் — இந்த இராஜகோபாலாச்சாரியார் ஒரு காலத்தில் மகாத்மா சிறையிலிருந்த பொழுது “தற்காலிக மகாத்மா” என்ற பட்டத்தால் அலங்கரிக்கப்பட்டார்.

ஆனால்?

இந்தக் கேள்வி அப்படி ஒன்றும் புதிதல்ல.

தேசம் எப்பொழுதுமே ராஜாஜீயின் பெயருக்கு எதிரில் ஒரு கேள்விக் குறியைப் போட்டு வந்திருக்கிறது. இக் கேள்விக் குறிக்குப் பின்னால் சம்பவங்கள் சங்கிலி போல் நடந்திருக்கின்றன.

சத்யாக்கிரகயுகம்.

யுத்தம் நடந்து கொண்டிருந்தது. ராஜாஜீ காங்கிரஸின் சர்வாதிகாரியாக இருந்தார். அப்பொழுதும் அந்த விளையாட்டுப் பொம்மை — சட்டசபை இருக்கிறதே அதன் அங்கத்தினர்களிடையே ஆலயப்பிரவேசச் சட்டத்திற்கு ஆதரவு தேடி நேரத்தைச் செலவழித்ததற்காக சில தேச பக்தர்களின் வெறுப்புக்குப் பாத்திரமானார். அவர்கள் கொண்ட கோபத்தினால் ராஜாஜீ ராஜீனமாச் செய்யவேண்டி நேர்ந்தது.

இச்சம்பவத்திற்குப் பிறகு 1935 ஆம் ஆண்டில் ராஜாஜீ திருச்சியில் நடந்த ஒரு தேர்தல் சம்பந்தமாக தேசத்தில் ஒரு பெரும் பிரச்னையைக் கிளப்பினார்.

கட்டுப்பாட்டுக்கு விரோதமாகப் போனதற்காக டாக்டர் ராஜன் போன்ற புடம் போட்ட தேசபக்தரை காங்கிரஸிலிருந்து மட்டுமன்றி பொது வாழ்விலிருந்தே விலகும்படி கட்டாயப்படுத்தினார். யுத்த தந்திரப்படி பார்த்தால் ராஜாஜீ சொன்னது சரிதான். ஆனால் ராஜனுடைய கட்சியை, கொள்கையை ஆதரமாகக் கொண்டு பார்த்தால் பலமற்றதல்ல.

சிலசமயம் ஆத்மாவின் வாக்குக்குக் கீழ்ப்படிய அதைக் காப்பாற்ற, கட்டுப்பாடு – சட்டம் முதலியவைகளைத் தகர்த்தெறியவும் வேண்டியது கடமையாகி விடுகிறது என்பது ஸ்ரீ ராஜன் வாதம். உண்மையில் சத்யாக்கிரகக் கிளர்ச்சி முழுவதற்கும் இக் கொள்கை தான் ஆதாரமாயிருந்திருக்கிறது. ஆனால் ராஜாஜீ இதை ஒப்புக் கொள்ளவில்லை.

இதோடு முடிந்திருந்தால் விஷயம் அறிவுக்கெட்டும். ஸ்ரீ ராஜனை எல்லாப் பதவிகளினின்றும் விலகும்படி செய்துவிட்டு ராஜாஜீ திடீரெனத் தேசத்தையே திடுக்கிடச் செய்தார்.

“நான் பொது வாழ்விலிருந்து விலகிப் போகிறேன்” என்ற அறிக்கை வெடிகுண்டு போல் வந்து விழுந்தது.

தேசம் சொல்லியது.

காங்கிரஸ் சொல்லிற்று.

காரியக் கமிட்டியார் சொன்னார்கள்.

மகாத்மா சொன்னார்.

எல்லோரும் சமாதானப் படுத்தினார்கள்.

ஆனால் ராஜாஜீ அசையவில்லை.

அவர் ராஷ்ட்ரபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவது நிச்சயமாகியிருந்தது. அவர் ஏற்கவில்லை. பொது வாழ்க்கையைத் துறந்து உபநிஷதம் படிக்க ஆரம்பித்தார்.

ஆயினும் எவர் காங்கிரஸின் தலைமையை உதறி எறிந்தாரோ — எவர் தன் நெடு நாளைய சகாக்களின் வேண்டுகோளை மறுத்தாரோ — எவர் தேசத்தின் வேண்டுதலை மறுத்து ஏகாந்தமான பற்றற்ற வாழ்க்கையைக் கழிக்க விரும்பினாரோ — அவரே — அந்த ராஜாஜீயே அரசியலில் தேவை நேர்ந்தபோது பிரவேசித்து சென்னையின் பிரதம மந்திரியானார். டாக்டர் ராஜனையும் மந்திரிகளில் ஒருவராக நியமித்தார்.

காங்கிரஸின் ஆட்சி காலத்தில் அரசியல் சிக்கல்களை இவ்வளவு திறமையாக ராஜாஜீ போல் தீர்த்தவர் வேறெவருமில்லை.

காங்கிரஸ் கட்சியின் தலை சிறந்த பிரதம மந்திரி அவரே.

இம்மாதிரியே சில ஆச்சரியக் காட்சிகள் நம் முன்னுள்ளன. சுமார் இரண்டு வருஷங்களாக ராஜாஜீ தேசத்தின் பிரதான தலைவராக ஆகிக் கொண்டிருந்தார். தன் புத்தி பலத்தால் அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியை காந்திஜீயின் மார்க்கத்திலிருந்து பிரித்து வேறு மார்க்கத்தில் செலுத்திக் கொண்டு வந்தார். பூனா-பம்பாய்—வர்தா முதலிய இடங்கள் அவருடைய வெற்றிக்கொடியின் சின்னங்களாகத் தோன்றின. அவருடைய மந்திரத்தால் கட்டுண்ட ஜனங்கள் காந்திஜீயின் அகிம்ஸை கொள்கைக்கு ஒரு விசேஷ அர்த்தம் கொடுக்க ஆரம்பித்தார்கள். சர்க்காரோடும் யுத்தத்தில் ஒத்துழைக்கவும் தயாரானார்கள்.

ராஜாஜீயும் ஜவஹரும் ஒருவருக்கொருவர் நெருங்கி வருவது போல் தோன்றியது. ஆனால் மறுபடியும் காந்திஜீ நேரு முதலிய தன் பழைய சகாக்களுடன் அபிப்பிராய பேதப்பட்டு மறுபடியும் தனியாய் நிற்கக் கண்டோம். காங்கிரஸில் ஒரு முகமாக அவரை எதிர்த்தார்கள். ஆயினும் அவ்வெதிர்ப்புப் புயலின் மத்தியில் சிறிதும் கலங்காமல் தன்னிடத்திலே நின்றார்!

ஜனங்கள் — பாகிஸ்தான் மனங்கொண்டு எதிரியைப் போர் தந்திரத்தால் தோற்கடித்து நிற்கும் இப் பிராமணரைக் கண்டு அதிசயிக்கிறார்கள், இதென்ன! ஏனிப்படி!!

இந்திய அரசியலைக் கற்கும் மாணவனுக்கு இக் காட்சிகள் பிரமை உண்டு பண்ணும் புதிராகுமானால் அதில் ஆச்சரியமொன்றுமில்லை.

நேற்று வைராக்கியம்—இன்று பற்று. நேற்றுத்துறவரம் பூண்டு கல் போல் அசையாதவர் இன்று அரசியல் சிங்காதனத்தில் வீற்றிருந்தால் சாதாரண மனிதன் இவர் பெயருக் கெதிரில் 'கேள்விக்குறி' ஏன் போட மாட்டான்.

இந் நிலையில் அவன் கண்களுக்கு இவர் புதிர்களால் நிரம்பியவராகவும் – தாக்கிப் பேசத் தகுந்தவராகவும் காணப்பட்டால் அதில் விநோதமொன்றுமில்லை. இக் குழப்பத்தினால் அவன் கலங்கிப் போவான். தன்னையே கேட்டுக் கொள்ளுவான் – '1922-ஆம் வருஷத்து ராஜாஜியும் 1932, 1935, 1937, 1942 ஆகிய வருஷங்களிலிருந்த ராஜாஜிக்களும் ஒருவரே தானா!'

இக்கேள்விகள் பயங்கரமானதாயும் கடுமையானதாகவும் தோன்றினாலும், அவைகளில் கடுமை ஒன்றுமில்லை.

உண்மை என்ன ?

ராஜாஜி மாறவில்லை – சூழ்நிலை மாறிவிட்டது.

துக்கமாயிருக்கலாம்.

1942–1922 அல்ல.

மேலும் நாம் ஒருவரை அவர் நிலையிலிருந்து பிரித்துப் பார்க்க விரும்புவோமானால் அவரை – அதுவும்

ராஜாஜீ போன்ற போர்த்திறன் கொண்டவரை எப்படிப் புரிந்து கொள்ள முடியும் ?

பிம்பம் அதுதான் ஆனுல் பின்னணி மாறிவிட்டது. பல கருத்துக்களை வெளியிடும் நிறங்களில்லாத போது நாம் சித்திரத்தை சரியாகவும் சுலபமாகவும் புரிந்து கொள்ள முடிவதில்லை.

நாம் ராஜாஜீயை முழுவதும் ஆராய்ந்து விட்டு ஒரு முறை பார்ப்போமானுல் நாம் அவரைச் சரியானபடி மதிப்பிட முடியும்.

சூழ் நிலையின் பலத்தில் அவரைச் சரியானபடி புரிந்து கொள்ளவும் – எடை போடவும் இலகுவாக இருக்கும். மேல் போக்காகப் பார்த்தால் ஒன்றும் நடக்காது. ஆகையால் நாம் சிறிது கீழே – ஆழத்தில் இறங்கிப் பார்ப்போம்.

3

ராஜாஜீ என்று பெயர் கொண்ட இம் மனிதர் உள்ளே எப்படி – என்னவாயிருக்கிறார்–எப்பொருள் கொண்டு இவரை வார்த்திருக்கிறது என ஆராய்வோம்.

ராஜாஜீயோடு சம்பந்தப்பட்ட விஷயங்களில் முதலாவது அவரது அமைப்பு (வார்ப்பு).அவருடைய அமைப்பு பூரணமாக புத்திவயப்பட்டது. ஆனால் அவரிடம் உணர்ச்சி இல்லை என்பதில்லை. அவ் வுணர்ச்சியின் மீது நாலா பக்கமும் விவேகம் என்ற அங்குசம்இருந்து கொண்டே இருக்கிறது. வாழ்க்கையில் பிளக்க முடியாத அறிவுக் கவசத்தை அணிந்து கொண்டு இவர் பலதறப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறார்.

ராஜ தந்திரத்தின் சக்ரவியூகத்திலும் அறிவே அவருடைய பிரதான ஆயுதம்.

சட்டஞானம் இவ்வறிவைத் தீட்டித் தீட்டி கத்தி போல் கூர்மையாக்கி விட்டது. இவ்வாயுதத்தின் மேல் ஏற்பட்ட நம்பிக்கையினால் இப்போர் வீரரிடம் மற்ற தேவைகள் – ஆயுதங்கள் முதலியன அவசியமில்லை என்ற எண்ணம் தோன்றி விட்டது, இதனால் இன்னும் தேவைப்படக் கூடிய மற்ற அவசியமான ஆயுதங்களைப் பொருட்படுத்தாமலிருக்கும் வழக்கம் உண்டாகி விட்டது.

சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் அவர்கள், "ராஜாஜீயின் வாழ்க்கை முழுவதையும் இந்த மூளேயே சரிப்படுத்தியும் செலுத்தியும் கட்டுப் படுத்தியும் வந்திருக்கிறது. சட்டஞானம் என்ற சாணையில் தீட்டப்பட்டு அது மிகவும் கூர்மையாகி விட்டது. அவரை அஜாக்கிரதையாயிருக்கக் காண முடியாது. தம் கட்சிக்குப் பலந்தேட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கவும் பார்க்க முடியாது. அவரிடம் தர்க்க சக்திக்குக் குறைவேயில்லை. ஒரு சத்தற்ற – பலமற்ற கட்சியைக் கொடுங்கள், அதை அவர் வலுவுள்ள தாக்குவார். ஒரு வலுத்த கட்சியைக் கொடுங்கள், அதை இன்னும் வலுத்ததாக்க முயற்சிப் பார்." என்று எழுதுகிருர்.

இந்த சாத்வீக குணங்கொண்ட பிராம்மணரிடம் இவ் வறிவு இலேசாகக் கிளம்பி, பரவி அவரை முழுதும் ஆட்கொண்டு விட்டது. அதனுல் அவருடைய அடக் கமும் தவமும் தலையெடுக்க முடியவில்லை. அரசியலில் பிரவேசித்தால் தியாகம்—சூழ்நிலை ஆகியவற்றின் மேடு பள்ளங்களில் இவ்வறிவானது ராஜதந்திரம்— போர்த் தந்திரம் என்ற ரூபங்களைக் கொண்டு விட்டது.

பார்ப்பதற்கு எளிமையாகவும் சரளமாகவும் தோன் றும் இப் பிராமணரிடத்தில் நாம் காந்தீய யுத்தக் கலை யின் சாணக்யனைக் காண்கிருேம்.

காந்தீயத்தில் எங்காவது தந்திரக் கட்சி ஒன்று இருக்க முடியுமானல், ராஜாஜீ அக்கட்சியின் தலைசிறந்த பிரதிநிதியாவார்.

உண்மையைக் கேட்டால் – காந்திஜீயின் வலது கையாக இருந்த போதிலும் – காந்தீயத்தின் ஆத்மா ராஜாஜீயிடம் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. காந்தீயம் விருப்பு வெறுப்பற்ற ஆத்மாவுடன் செல்லுகிறது – அல்லது செல்ல விரும்புகிறது என்ருவது வைத்துக் கொள்ளுங்கள். அதில் ராஜ தந்திரம் இல்லை; நீதி இருக்கிறது. சதுரங்கத்தின் ஆள் மாருட்டம் இல்லை; ராஜமார்க்கம் போன்ற நேர் வழியிருக்கிறது. காந்தீயம் எதிரியின் துக்கத்தில் துக்கமும் – மகிழ்ச்சியில் மகிழ்ச்சியும் கொள்ளுகிறது. அது எதிரியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ஆர்வங் கொள்ளுவதில்லை. அதில் அதற்கு எவ்வித சுகமும் இல்லை.

ஆனல்!

ராஜாஜீயோ அமைப்பில் – வார்ப்பில் – மோதிலால் நேருவைப் போன்றவர். ராஜாஜீ ஒரு மிகப் பெரிய யுத்த தந்திரி.

காலஞ்சென்ற தேசபந்து, மோதிலால் போன்றவர்களைக்கூடத் திணற அடித்த இம் மனிதரின் அற்புதத்தை நான் கயை காங்கிரஸில் கண்டது முதல் இவர் மேல் ஒரு கண் வைத்தே வந்திருக்கிறேன். எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும்கூட ‘சுத்தக் காந்தீயம்’

ராஜாஜீயை ஆட்கொள்ள வில்லை என்பதே என் அபிப் பிராயம். இதற்குக் காரணம் இவருடைய மூளை இவருடைய இதயத்தை அமுக்கி விட்டது தான்.

காந்தீயம் மூளை போன்ற வஸ்துவல்ல; அது மூளையின் பொருளல்ல. இதயத்தின் பொருளாகும்.

இப்படி நான் சொல்லும்பொழுது மகாத்மாஜீ ராஜாஜீ யைப்பற்றிச் சொன்ன புகழுரைகளை மறந்து விட வில்லை. காந்திஜீ சொன்னார் — "என் ஒத்துழையாமை இயக்கத்தை விவேகத்தோடு என்னை பின் பற்று பவர்கள் யாராவது இருந்தால் அவர் ராஜாஜீதான்."

காந்திஜீயின் வாயிலிருந்து தன்னைப் பின் பற்று வோரைப்பற்றிக் கொடுத்த புகழுரைகளில் இதுவே தலை சிறந்தது.

இன்னொரு சம்பவமும் ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு முறை காந்திஜீ காங்கிரஸின் சர்வாதிகாரியாக நிய மிக்கப் பட்டபொழுது ஒரு முக்கியமான தலைவர் அவரைப்பார்த்து, "நீங்கள் கைது செய்யப்பட்டால் யாரைச் சர்வாதிகாரியாக நியமிப்பீர்கள், எனக் கேட்டார். காந்திஜீ பளிச்சென்று, "ஏன் ராஜாஜீ இருக்கிறாரே," என்றார்.

காந்திஜீயால் நம்பிக்கை வாய்ந்த ராஜாஜீயைப் பற்றி இப்படிப்பட்ட அத்தாட்சிப் பத்திரம் கிடைத்தும் — "ராஜாஜீ காந்தீய ஆத்மாவால் ஆட்கொள்ளப்பட

வில்லை" என்று நான் சொன்னால் அது என்னுடைய அதிகப் பிரசங்கித் தனமாகத் தோன்றலாம்.

நான் யோசித்திருக்கிறேன். காந்திஜீயின் வார்த்தைகளை வைத்துக் கொண்டும் யோசித்திருக்கிறேன். ஆயினும் நான் கட்டிய முடிவை மாற்றக் காரணம் ஒன்றும் காணவில்லை.

உண்மையில் நான் சொன்னது 'காந்திஜீ சொல்லுக்கு மாறுபாடானதில்லை. நான் சொல்லுவதும் இதுதான். பொதுஜனக்கிளர்ச்சி – செயல் முறை, சம்பந்தப்பட்ட வரை காந்தீய யுத்த தந்திரத்தை நன்கு அறிந்தவர் ராஜாஜீதான்; ஆனால் காந்தீயத்தின் பாரமார்த்திக – நிலையான அம்சத்தை அறிய நாம் ராஜாஜீயையும் வல்லபாய் படேலையும் பார்க்க வேண்டியதிருக்காது. ஸ்ரீ வினோபாவும், கிசோர்லாலும் நமக்கு வழி காட்டுவார்கள்.

ஆதலால் ராஜாஜீ முக்யமாக அறிவும் மேதா விலாஸமும் கொண்ட ஒருவர் என்ற என் முடிவை மாற்ற எவ்விதக் காரணமும் புலப்படவில்லை. ஒரு முதல் தரமான மூளைகொண்ட, மேதாவியான அறிவாளியிடமிருக்கும் விசேஷ குணங்கள் அவரிடமிருக்கின்றன. அதே போல் மேதை அறிவு ஆகியவைகளின் பலத்தில் செல்லும் ஒருவனிடமிருக்கும் பலக் குறைவும் அவரிடமிருக்கிறது.

அவரிடமிருப்பது யோகியின் — சாதகம் செய்பவனின் சாதனையல்ல. ஒரு நியாயவாதியின் — தர்க்கக்காரனின் தர்க்கமும் அறிவுமாகும்.

காந்திஜீயைப் பின் பற்றுவோர் எவரிடமும் ராஜாஜீ யிடமிருக்கும் சூட்சமமான தர்க்க சக்தியும் — அறிவின் அற்புதமும் — விஞ்ஞானி போன்று எதையும் துண்டு துண்டாக்கி — பிளந்து பிரித்துப்பார்க்கும் ஆற்றலும், விரோதிக்கு அவனுடைய பாஷையிலே கடுமையாகப் பதில் கொடுக்கும் திறமையும் இல்லை என்றே சொல்லி விடலாம்.

அரசியல் துறையில் இவைகள் மிகச்சிறந்த குணங்களா யிருந்தபோதிலும், சாதனைத் துறையில் — தவத்துறை யில் இவைகளே பலஹீனமான குணங்களாகும்.

காந்தீயவாதி சிரிக்கவும் செய்கிறான் — கேலியும் செய் கிறான். ஆயினும் அவன் ஹாஸ்யத்தில் — கேலியில் — குத்தும் கரகரப்பும், நஞ்சும் இருப்பதில்லை. அந்த ஹாஸ்யமும் கேலியும் விரோதியை — அதைக் காட்டி லும் அவன் ஆத்மாவை, கை தூக்கி மேலே எடுத்துச் செல்லுகிறது. சூழ் நிலையினின்றும் கசப்பு விலகுகிறது. அவனைச் சரள முள்ளவனாகவும் அடக்கமுள்ளவனாக வும் ஆக்குகிறது. எதிரிக்கு அவனுடைய தோல்வி யைக் கடுமையானதாகவோ சகிக்க முடியாததாகவோ ஆக்குவதில்லை. அது ஒரு மின்சாரத் தூக்கி.

ஆனால்!

ராஜாஜீயின் கேலி – ஹாஸ்யம் – சிரிப்பு, விரோதியின் நெஞ்சைப் பிளந்து ஊடுருவிச் செல்லுகிறது. நன்ருக வும் பதிந்து விடுகிறது. ராஜாஜீ ஏதாவது ஒரு விஷயத் தைக் கைக் கொண்டால் அதிலேயே முற்றிலும் ஈடு பட்டு விடுகிருர்.

தாஸ் கூட்டத்தை வேரறுப்பதற்காக அவர் தேசம் முழுவதும் ஒரு பெரும் புயலைக் கிளப்பியதைப் பார்த்த வர்கள், அவரே மறுபடி தேர்தலில் ஈடுபட்டு–சென்னை மகாணத்திலிருந்து ஜஸ்டிஸ் கட்சியின் அரசியல் வாழ் வையே அழித்துவிடக் கங்கணங் கட்டிக்கொண்டு இரவு பகலை மறந்து சுற்றுவதைப் பார்த்தார்கள்.

உண்ணும் நினைவில்லை !

தூக்கமில்லை !!

உடல் ஞாபகமில்லை !!!

செயல் ! செயல் !! செயல் ஒன்றே !!!

இந்திய அரசியலில் ராஜாஜீயின் இவ்வற்புத யுத்த சமார்த்தியத்தை மக்கள் எப்படி மறப்பார்கள் ? மறக் கத்தான் முடியுமா ?

அதே வழுக்கைத்தலை – அதே சன்யாசி உடை – கையில் ஆயுதமொன்று மில்லை – புத்தி பலத்தால் மட்டுமே சூழ் நிலையையே ஆட்டி அசைத்துவிடும் இம் மனிதரை – ராஜாஜீயை – இந்திய சரித்திரத்தில் சாணக்யனைத் தவிர வேறு யாருடன் அவரை ஒப்பிட முடியும் ?

ராஜாஜீ ஒரு தடவை தாக்க ஆரம்பித்தால் தாக்கிக் கொண்டேயிருக்கிறார். ஒரு புத்திசாலியான யுத்த தந்திரியின் அடியல்லவா? அதில் எதிரியைப் பொடிப் பொடியாக்கிவிடும் விருப்பத்தைத் தவிர வேறொன்றும் இருப்பதில்லை.

எதிரி 'மரணத்திற்கு' சமீபம் இருக்கிறானா என்று பார்க்கவோ அல்லது தாக்குதலை நிறுத்திக்கொள்ள வேண்டியது அவசியமா என்று நிர்ணயிக்கவோ — தாக்குதலை நிறுத்தி, சாந்தமடைந்து பார்க்கும் வழக்கமே இல்லை.

சண்டையிலும் போராட்டங்களிலும் செயல் — நடை — வேகம் இவற்றோடு முன்னேறிக் கொண்டே போகிறார். தாக்க நிச்சயித்தபின் அவருடைய வேகமும் ஒரு பெரியசக்தி. இன்னொரு திருஷ்டியில் இது அவருடைய ஒரு பலஹீனமாகும்.

இப்படிச் சொல்லும் பொழுது அவருடைய வாழ்க்கையின் மகத்துவம் பொருந்திய — ரஸிக்கத் தக்க ஒரு சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது. அவர் பிரபலமான வக்கீலாயிருந்தபோது நடந்த விஷயம்.

வெளியூரில் ஒரு வழக்குக்குப் போய்விட்டுப் 'பீஸ்' பணத்துடன் திரும்பி வந்துக்கொண்டிருந்தார். பாதை சரியாக இல்லை. திரும்பி வர மாட்டுவண்டி ஒன்று தான் கிடைத்தது. நல்ல இருட்டு. நீண்ட பிரயாணம். வண்டியில் படுத்துக்கொண்டு 'பீஸ்' பணத்தை தலை

மாட்டில் வைத்துக் கொண்டார். நடு நிசி ஆழ்ந்த நித்திரை. டோல்கேட் வந்தது.

தண்டல்காரன் வண்டியை நிறுத்தி பெரிதாக கூப்பாடு போட்டு இவரை எழுப்பினுன். கொள்ளைக்காரர்கள் தன்னைச் சூழ்ந்துகொண்டு தன்னைக் கொள்ளையடிக்க ஆர்ப்பாட்டம் செய்வதாக ராஜாஜீ நினைத்துக்கொண் டார். அவ்வளவுதான். எழுந்தார். ரிவால்வரை எடுத்துப் பேசாமல் அம்மனிதன் தலையில் சுட்டு விட் டார். யுத்தத்தின் அடுத்தபடிக்கு அவர் தயார் செய்த பொழுது, உண்மை நிலை தெரிந்தது. உடனே கீழே குதித்தார். வேதனையால் புலம்பும் அம்மனிதனை மடி யில் சாத்திக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென் ருர். அவன் குணமடையும் வரை அவனை நன்கு பேணி வந்தார். குணமடைந்த பின் அன்று வந்த ரூபாய் முழுவதையும் அவனுக்கு அளித்துவிட்டார்.

*　　*　　*

காந்திஜீயின் பிரபாவமும் — பல வருஷங்களாகச் செய்த தியாகமும் — தவம் நிரம்பிய வாழ்க்கையும் — அந்த அவசரத்தின் மேல் கடுந்தடையையும் கட்டுப் பாட்டையும் ஏற்படுத்தியிருக்கின்றன. இன்றே ராஜா ஜீயைச் சுற்றிப் பிளக்க முடியாத கம்பீரம் நிலவுகிறது. ஆனல்!

மேற்கண்ட சம்பவத்தின் அடியில் இருக்கும் பண்பு முற்றிலும் அழிந்து விடவில்லை. கீழே ஆழத்தில் அந்த நெருப்புத் தூங்கிக் கிடக்கிறது.

ராஜாஜீயின் கண்கள் சக்தியற்றுப் போனதின் மூலம் அவருக்கு இன்ஞெரு சௌகரியமும் ஏற்பட்டுவிட்டது. அவருடைய கண்களில் கலர் கண்ணுடி இருக்கிறது. காலஞ்சென்ற தேசபந்து தாஸ் ஒரு சமயம், " ராஜாஜீ கருப்புக் கண்ணுடியின் மூலம் மற்றவர்களைச் சரியாகப் பார்க்கிருர், ஆனுல் அவரால் தன்னை மாத்திரம் பார்க்க முடியவில்லை" என்று கூறினுர். இக்கருத்து எந்த அளவு வரைக்கும் சரியென என்னுல் சொல்ல முடியாது. ஆனுல் இந்தக் கருப்புக் கண்ணுடி அவருக்கு மிகுந்த உதவி செய்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

விரோதிகள் கையில் அவர் பிடிபடாமலிருக்கவும் அது உதவுகின்றது. அவர் யாருடனுவது பேசும் பொழுது பிறருடைய எண்ணங்களையும் கருத்துக்களை யும் அவர்கள் கண்களின் மூலமாக ராஜாஜீயால் பார்க்க முடியும். ஆனுல் ராஜாஜீயின் பார்வையி லுள்ள அர்த்தத்தையும், அதன் பலாபலன்களையும் பிறர் அறிய முடியாதபடி இந்தக் கருப்புக் கண்ணுடி மறைத்து விடுகிறது. மற்றவர்களால் அதைக் கவனிக்க முடிவதில்லை. இவ்விதமாக இதில் இவருக்குத்தான் லாபம் அதிகம். போர்த் தந்திரத்தில் இந்த லாபம் மிகவும் மகத்துவம் பொருந்தியது.

'சிந்து அப்சர்வர்' என்ற பத்திரிகையில் "கோஸ் ஆப்" என்பவர், "மற்றவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்து வதில் அவருக்கு ஆனந்தமுண்டாகிறது. ஆனுல்

இதெல்லாம் சதிகாரன் என்ற ரூபத்தில் ஏற்படுவத லல்ல, யுத்த தந்திரி என்ற முறையில்தான் ஏற்படு கிறது" என்று சொல்லுகிறுர். அச்சமயம் யுத்த தந்திரம் – அணி வகுப்பு முதலிய அவசியமான காரி யங்களே மேலோங்கி நிற்கின்றன.

*　　　*　　　*

ராஜாஜீ போன்ற முதல்தர மூளே படைத்த மனிதர் மக்களுக்குள் – மனித சமுதாயத்தில் இவ்வளவு சக்தி யுள்ளவராக ஆனதெப்படி என்பதுதான் ஆச்சரியத் திற்குறிய விஷயம். மக்கள் இதயத்தில் இடம் பெற அரசியல் சம்பந்தப்பட்டவரை சொற் சாதுரியம் வேண் டும். மக்கள் கூட்டங்களே, புயல், மரங்களே அசைத்து விடுவதுபோல், ஆட்டி அசைக்கும் வாக்குவன்மை அவரிடம் இல்லே.

இதயங்களில் அணேயப்போகும் விளக்கின் பிரகா சத்தைத் தூண்டிவிடும் லஜபதிராயினுடையதைப் போன்ற சிம்ம கர்ஜனே இல்லே. மாளவியாஜீயிட மிருக்கும் வாக்கு வெள்ளமோ – அல்லது அவ்வெள் ளப் பெருக்கின் கடைசிவரை இருக்கும் மென்மையோ, அன்றி பிரசங்க வன்மையோ இவரிடமில்லே. பெரும் இலக்கிய ஆசிரியர்களும் கேட்க வேண்டும் – கேட்க வேண்டும்" என்று ஆர்வத்துடன் எதிர்நோக்கும் புலாபாயின் பிரசங்கத்திலுள்ள பளபளப்போ அவ ரிடம் இல்லே.

ஆனால்!

"— ராஜாஜீ — பேசக் கேட்க வேண்டும் — அவர் 'சொல்லின்பத்தைப் பருக வேண்டும் - பருக வேண்டும்" என்று மக்கள் துடிப்பதற்கு அப்படி என்ன அவரிடமிருக்கிறது!

காரணம் கண்டுபிடிக்கக் கஷ்டமே வேண்டாம். மிகக் கடினமான பிரச்னைகளையும் - சுருக்கமாகவும் - சரளமாகவும் - மிகச் சிறிய வார்த்தைகளில் - தெளிவாக சிறு கதைகள் - உபமானங்கள் மூலம் சொல்லும் அற்புதமான சக்தி அவரிடமிருக்கிறது.

ஒரு ஆசிரியர் சொல்லுகிறார்.

ராஜாஜீயிடம் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் அலங்காரப் பேச்சில்லை. ஸ்ரீ. எஸ். சீனிவாசய்யங்காரின் அதிரடிக்கும் கற்பனை குறைவு. ஆனால் சுருக்கமாகவும் - வலுவாகவும் - திறமையாகவும் ஏதாவதொரு விஷயத்தின் சாராம்சத்தை தாக்குதலிலோ, தற்காப்பிலோ சொல்ல வேண்டுமானால் அவர் முறை பரிபூரணமானது,"

அவர் பிரசங்கம் பெருங் கூட்டங்களைக் காட்டிலும் சிறு கூட்டங்களுக்கே அதிகம் உபயோகமானது. "வெகு தூரம் ஊடுருவிச் செல்லும் சக்தி இழந்திருப்பது மட்டுமன்றி அதில் இனிமையும் மென்மையுமில்லை" என்று ஸ்ரீ. சி. ஆர். சீனிவாசன் கூறுகிறார்.

பிடித்தமில்லாததா யிருந்தாலும், குலைக்குள்ளும் எலும்பிற்குள்ளும் ஊடுருவிச் சென்று மனிதனையே ஆட்டி வைக்கும் பனிக்காற்றுக்குச் சமமானது அவரது பிரசங்கம். உண்மையில் அவர் மக்களின் தலைவரல்ல.

ஊழியர்களின் வழிகாட்டி

உணர்ச்சி வசப்படாது புத்தியின் சமத்காரத்தை அதிகம் விரும்பும் படித்த மத்ய வர்க்கத்தைச் சேர்ந்தவர்களின் தலைவர். செல்வாக்குள்ள ஒரு தலைவருக்கு இருக்க வேண்டிய அளவைக் காட்டிலும் அதிக அளவில் அவரிடம் அறிவு இருக்கிறது. தன்னெதிரில் கவர்ச்சியான ஒன்றைக் கண்டால் அதிலேயே அவர் லயித்து விடுகிறார். பிறகு அதற்காக எதையும் தியாகம் செய்யத் தயாராகி விடுகிறார். அதில் உணர்ச்சி சம்பந்தமிருந்தாலும் சரி, இல்லையாயினும் சரி. அவரிடம் உணர்ச்சிப் பெருக்கு ஆவேசமாக இல்லை. ஜன சமூகத்தின் இதயத்தைத் தொடும் ஆடம்பரமான வாக்குவன்மை இல்லை.

ஆனால்!

ராஜாஜீ ஒரு பெரிய சக்தி வாய்ந்த யதார்த்தவாதி. உணர்ச்சியே பிரதானமாக நிலவும் அரசியல் சந்தையில் - உணர்ச்சியையும் ஆவேசத்தையுமே தேசபக்தியின் லட்சணங்களாகக் கருதப்படும் அரங்கில் ராஜாஜீ தன் ஒழுக்கத்தாலும் - மேதையாலும் இன்றுள்ள ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறார்.

நண்பர்கள் - எதிரிகள் எல்லோரும் ஒரு முகமாக அவருடைய மேதையை ஒப்புக்கொள்ளுகிறார்கள். சென்னையின் மாஜி கவர்னர் ஸர் ஜார்ஜ் ஸாடன்லி அவரைப் புகழ்வோரில் ஒருவர். லார்டு எர்ஸ்கினும் அவரிடம் மோகித்துக் கிடந்தார்.

ராஜாஜீயின் அறிவு அவருக்கு மற்றொரு விசேஷ குணத்தைக் கொடுத்திருக்கிறது.

பொதுஜன சேவையை அவர் எப்பொழுதுமே சொந்தப் பற்று - பாசம் இவைகளிலிருந்து தனியாக்கி நோக்குகிறார்.

வருஷக் கணக்காகப் பொதுஜன சேவையிலீடுபட்டிருந்தும், அனேக ஊழியர்களிடம் பழக்கம் ஏற்பட்டிருந்தும், அவர் சொந்த முறையில் ஊழியர்களோடு நெருங்கி யிருந்ததில்லை. பொதுஜன நன்மையைக் கருத்தில் கொண்டும் அம்மாதிரி செய்வது தம் லட்சியத்திற்கு சம்பந்தப்பட்டது என்று கருதுவதாலுமே அவர் மற்றவர்களோடு சேர்ந்து வேலை செய்கிறார். ஆனால் 'ஊழியர் என்னும் பிராணிக்குப் பின்னாலிருக்கும் மனிதனின் இதயத்திற்குள் பிரவேசிக்கவோ அன்றி அதைத் தொடவோ முயற்சிப்பதில்லை.

இவ்விஷயத்தில் இவர் தன் குரு - காந்திஜீக்கு முற்றிலும் மாறுபட்டிருக்கிறார்.

காந்திஜீ மனிதனின் இதயத்திற்குள் இறங்குகிறார். அதனால் நூற்றுக் கணக்கான மனிதர்கள் தங்கள்

நெஞ்சைத் திறந்து அவரிடம் பேசுகிறார்கள். இவை களுக்கும் அரசியல் அல்லது சமூக சீர்திருத்த திட்டங் களுக்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதில்லை.

ராஜாஜீக்கு மனிதன் பிரதானமில்லை. அவன் வேலைக்கு வேண்டிய சாதனமாகத்தான் அவர் கண் ணில் படுகிறான். அப்பொழுது அவ்வேலைக்கு அவனைக் கண்யமாகவும் மரியாதையாகவும் வரவேற்கிறார்.

ஆதலால்தான் மக்களுக்கும் காந்திஜீக்கும் உள்ள தொடர்பு சுயமானதாகவும் - நித்தியமானதாகவும் - பூரணத்வம் பெற்றதாயும் இருக்கிறது.

ராஜாஜீயின் தொடர்பு வெளிப்படையானதாக இருக்கிறது. ஆதலால்தான் ராஜாஜீயின் தோழர் களும் அவரைப் புகழ்பவர்களும் அதிக மிருக்கிறார் கள். பக்தியுடனும் - மரியாதையுடனும் அவரை நோக்குவோர் இந்தியாவில், முக்கியமாக சென்னை மாகாணத்தில் அதிகமிருக்கிறார்கள். ஆனால் அவ ருடன் நெருக்கமும் ஆழ்ந்த நட்பும் கொண்டவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள்,

அவருக்கு நெருங்கிய நண்பர் யாராவது இருக் கிறார்களோ என்றுகூட நான் சந்தேகிக்கிறேன்.

இதில் அவருடைய குற்றம் ஒன்றும் இல்லை. அறிவே அவருக்கு அளக்கும் கருவி. அவர் மனிதனை யும் அவன் செய்யும் வேலையையும் ஒன்றாக்கிப் பார்க்க விரும்புவதில்லை. டாக்டர் ராஜன் சம்பந்தமாக

நடந்த விஷயத்தில் அவர் கொண்ட கருத்து இதற்கு மிகச் சிறந்த உதாரணம். ராஜனுக்கும் அவருக்கு மிருக்கும் தொடர்பு மதுரமானது. அவர் தூண்டுத லாலேயே ராஜன் அரசியலரங்கில் பிரவேசித்தார். ஸ்ரீ ராஜன், ராஜாஜீயைக் குருவுக்குச் சமமாகக் கருது கிறார். ஆனால் பொதுப் பிரச்னையில் ராஜாஜீ சொந்தத் தொடர்பைப் பற்றி சிந்திக்கவே யில்லை. இந்தப் பற்றற்ற தன்மையின் காரணமாகவே ராஜாஜீ மக்கட் கூட்டத்தின் தலைவராக முடிவதில்லை.

சாதாரணமான மனிதன் வெறுப்பும் - அன்பும் - குறைபாடும் - வலியும் சேர்ந்த ஒரு சேர்க்கையாக இருக்கிறான்; இயந்திரத்தைப் போல் அறிவுறுத்து வதை அவன் விரும்புவதில்லை. மனிதன் தன்மை கொண்ட நோக்குள்ளவனும் - குறைபாடுகளிருந்தா லும் அனுதாபத்தைத் தெரிவிக்கக் கூடியவனும் - குறைபாடுகளோடு கூடவே பாசத்துடன் அவனை ஏற் றுக்கொள்ளக் கூடியவனுமான தலைவன்பால் அவன் கவர்ச்சி கொள்ளுகிறான்.

ராஜாஜீயிடம் இவ்விஷயம்தான் இல்லை. ஆதலால் அவருடைய தோழர்கள் அவர் சம்பந்தமாக ஆழ்ந்த பற்றையோ, அன்றிப் பாசத்தையோ உணர்வதில்லை.

அங்கு அன்பில்லை. மரியாதை யிருக்கிறது.

நெருக்கமில்லை. பெருமை யிருக்கிறது.

'மகாத்மாஜீயின் பலமும் வேலைத் திறனும் வல்லபாய் சேவையும் வினயமும் ராஜேந்திர பாபு. மூளையும் தத்துவ ஞானமும் ராஜகோபாலாச்சாரியார்" என்று ஒரு நண்பர் சொன்னார்.

இவ்வார்த்தையில் மிகுந்த உண்மை யிருக்கிறது. இன்று ராஜாஜீ காந்திஜியின் கொள்கைகளைக் கொண்டே அவர் வழியை விட்டு வேறு வழியில் செல்லுகிறார் என்பது எனக்குத் தெரியும்.

நான் வாழ்க்கை நோக்கத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். எல்லாவற்றையும் சேர்த்து இம்மனிதரை அறிவதே என் வேலை.

ராஜாஜீ இயற்கையாகவே ஒரு தர்க்கவாதி. ஒரு தர்க்கவாதியைப் போல் அவர் விஷயங்களையும் பிரச்னைகளையும் அலசி அவைகளின் ஆழம்வரையில் செல்லுகிறார்.

அவரிடம் ஒரு தர்க்கவாதியின் நேர் வெட்டு இருக்கிறது. தர்க்கிப்பதையே அவர் விரும்புகிறார். அதில் ரஸிக்கிறார்.

நம்பிக்கை காரணமாகவே எவ்விஷயத்தையும் ஒப்புக் கொள்ளக் கூடியவர் அவரல்ல. பக்தி – நம்பிக்கை இரண்டும் அவரிடம் மிகக் குறைவு.

ஸ்ரீ சி. ஆர். சீனிவாசன் எழுதினார் :

"அவர் தன் குரு பல அற்புதங்களை நிகழ்த்தப் பார்த்திருக்கிறார். இவ்வற்புதங்கள் – குருவிடம் அதிக

நம்பிக்கை கொள்ளச் செய்தன. ஆனால் அந்தக் குரு எந்தச் சாதனங்களைக்கொண்டு இந்த அற்புதங்களைச் செய்ய முடிந்ததோ அந்தச் சாதனங்களில் இவருக்கு நம்பிக்கை இல்லை.''

காந்தீயத் தத்துவத்திற்கு இன்று கிடைத்திருக்கும் உருவில் ராஜாஜீக்கு மிகுந்த அளவு பங்கு இருக்கிறது. காந்திஜீயின் வார்த்தைகளில் காந்திஜீக்கே தோன்றியிருக்காத ஆழத்தையும் சிறப்பையும் ராஜாஜீதான் தன் அறிவாலும் தர்க்க பலத்தாலும், ஒத்துழையாமைக் காலத்திலும் அதற்குப் பிறகும், வெளிக் கொணர்ந்தார்.

காந்தீயத் தத்துவத்தின் பதிப்பாசிரியர் – பாஷ்யக்காரர் என்ற முறையில் அதில் ஆழத்தைத் தேடி நிர்மாணித்ததில் அவருக்கு இணையற்ற வெற்றி கிட்டியது. ஆயினும் இம்முயற்சியில் அத் தத்துவத்தின் அகவழகும் மகத்துவமும் ஓரளவு சேதமடைந்தன.

விஷயமென்ன வென்றால், ராஜாஜீ மனச்சாட்சியின் தூண்டுதலாலோ அன்றிப் பண்பாலோ அல்ல, அறிவும் – தர்க்கமும் ஆறுதலடைந்ததால், மகாத்மாஜீயின் பக்தராகவும் – பின்பற்றுவோராகவும் ஆகியிருக்கிறார்.

இதில் காந்தீயத்தின் நிஷ்டையில்லை. இவ்வழிபாட்டில் வியவகார புத்தியும் தர்க்கத்திறனும் இருக்கிறது. ராஜாஜீ மகாத்மாவின் பாரமார்த்திக சிஷ்யரல்ல;

மகாத்மாவின் ஆழ்ந்த பாரமார்த்திகத்தோடே அவருக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. காந்தீயத்தோடு அவருக்குள்ள நெருக்கம் அறிவுவயப்பட்டது.

தற்கால நிலையில், மனிதனுக்கும் — சமூகத்திற்கும், இந்த அரசியலின் சீர்கெட்ட நிலை சீர்திருந்தி விடுதலை பெறுவதற்கும் காந்தீய வழி மற்ற எல்லா வழிகளைக் காட்டிலும் சுலபமானதாகவும், நடைபெறக் கூடியதாகவும் — அறிவுக் கொப்பியதாகவும் உள்ள ஒரு உபாயம் என்பதாலேயே ராஜாஜீ அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். காந்தீய சத்யாக்கிரகத்தின் அரசியல் ஆதாரம்கூட மனிதனின் பாரமார்த்திகப் போக்கைக் கொண்டே கட்டப்பட்டிருக்கிறது. காந்திஜீ தெய்வத்திலும் தெய்வத்தை நோக்கிச் செல்லும் தன்மையிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஆகையால் அவர் தன் செய்கைகள், கிளர்ச்சிகள் மூலமாக மனிதனிடம் மயங்கிக்கிடக்கும் தெய்வீகத் தன்மையை எழுப்ப முயற்சி செய்துகொண்டே செல்லுகிறார்.

ராஜாஜீ மனிதனைத் தத்துவ பூர்வமாக ஆராய்ந்து கொண்டு அரசியல் காரியங்களைச் செய்யத் தயாராயில்லை. அவர் மனிதனின் குறைபாடுகளையும், சமூகத்தின் சூழ் நிலைகளையும் நன்றாக ஆராய்ந்து கிடைக்கும் சாதனங்களையும் சௌகரியங்களையும் கணக்கிட்ட பிறகே வெற்றி தோல்வியைப் பற்றிச் சிந்தித்தபிறகே எக்காரியத்தையும் கைக்கொள்ள விரும்புகிறார். அவர் அந்தராத்மாவின் சொல்லுக்குப் பொதுக் காரியங்

களில் முக்யத்வம் கொடுக்க விரும்புவதில்லை. அவருடைய முடிவோ, நீண்ட ஆலோசனைக்குப்பின் — பரிசீலனைக்குப் பின் தான் ஏற்படுகிறது. மேலும் ஒவ்வொரு முடிவின் ஆழத்திலும் மேலே நடத்த வேண்டிய வேலைத் திட்டத்தின் வெற்றிக்கு சூழ் நிலையைச் சிருஷ்டிக்கும் கவனமும் இருக்கிறது. அவர் தேர்ந்த — முதல்தரமான அறிஞர். தன்னுடைய சக்தி வாய்ந்த இந்த (அறிவு) அஸ்திரத்தை எல்லாக் காரியங்களிலும் பரிபூரணமாக உபயோகிக்கிறார்கள்.

* * *

இத்தனை விஷயங்களையும் கருத்தில் கொண்டு இப்பொழுது நீங்கள் ராஜாஜீயைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

கூர்ந்த புத்தியும் விவேகமும் அவருடைய வாழ்க்கையின் "மேரு தண்டம்" என்பது முதலில் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயம். அவர் வாழ்க்கையில் இது நிரம்பிப் பரவிக் கிடக்கிறது. அவர் காந்தி யுகத்தின் ஒரு புத்தி — சமத்காரம் என்று நான் ஒருமுறை எழுதினேன். அது இன்றும் அதே அளவுக்குப் பொருந்தும்.

காந்தியுகத்தில் மோதிலால் நேருவைத் தவிர பொதுக் காரியங்களில் புத்தி பலத்தை இவ்வளவு விரிவாக ராஜாஜீயைப்போல் உபயோகித்த தலைவர் எவரும் தோன்றவில்லை.

தன் புத்திபலத்தைப்பற்றிக் கர்வம் கொண்டவரும் வக்கீலாகவு மிருந்தவருமான ஒரு மாஜி ராஷ்டிரபதி ஒரு கூட்டத்திலிருந்து வெளிவரும்போது, "இந்தக் கருப்புக் கண்ணாடிக்காரருடன் வாதம் செய்வது ஒரு பயங்கரமான அறிவுப் போர்" எனக் களைத்த – ஆயாச மடைந்த குரலில் சொல்லிக்கொண்டு போனார். இது முற்றிலும் சரியானது தான்.

அவருடன் சாதாரணமாகச் சம்பாஷித்துக்கொண் டிருப்பதே ஒரு அறிவு விருந்து. பிரச்னைகளின் அடித் தளம்வரைச் செல்லும் அவருடைய புத்திபலம் அற்புத மானது. டில்லிக் கன்வென்ஷனில், மற்ற தலைவர் களின் பிரசங்கங்கள், நம்பிக்கையாலும் சந்தேகத் தாலும், 'ஆனால் – கீனால்' முதலியவைகளால் நிரம் பிய ஒரு விசித்திரக் கலப்பாக இருந்த சமயம், ராஜா ஜீயின் பிரசங்கம் ஒன்றுதான் தெளிவானதாயும் சிக்கலெடுத்ததாகவு மிருந்தது.

விஞ்ஞான சாலையில் பரிசீலனை செய்யும் விஞ்ஞானி யைப்போல் அவர் ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு பரிசீலித்துப் பார்த்து, பிறகு அதற்குத் தகுந்தபடி செய்கிறார்.

இவ் வேலையில் இவருடைய அறிவு களைத்துப்போகக் கண்டவர் ஒருவருமில்லை. ஒவ்வொரு அறிவுப் போரும் அவரிடம் ஒரு புதுமையைக் காட்டுகிறது.

அவருடைய வெற்றியின் மற்றொரு காரணம்!

தன்னம்பிக்கை.

இவ்விஷயத்தில் அவர் மோதிலால் நேரு அவர்களை ஞாபகமூட்டுகிறார். விவாதங்களில் அவர் கவலை யற்றும் கலங்காமலிருக்கிறார். இவ்விஷயத்தில் அவர் மோதிலால்ஜீயைக் காட்டிலும் சிறந்தவர்.

ராஜாஜியிடம் அற்புதமான மனோபல மிருக்கிறது. சென்ற தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியை நிர்மூலமாக்கியது அவருடைய வேலைதான். அவருக்குத் தன்னைப்பற்றி பூரண நம்பிக்கை இருக்கிறது. சரியான சமயத்தில் 'அறிவு' என்னும் அஸ்திரத்தை விடுகிறார். சமயம் வராதவரைக்கும் அவர் சாந்தமாக உட்கார்ந்திருப்பார். உங்கள் பிரசங்கத்தின் மத்தியில் அவர் தலையிடுவ தில்லை. அவசரமும் ஆத்திரமும் அவரிடமில்லை.

ஆனால்!

அவர் முறை வந்ததோ தீர்ந்தது.

எதிரியை இரக்கமின்றித் தாக்கி அவர்கள் கட்சியை யும் வாதங்களையும் பொடிப் பொடியாக்கிவிடுவார்.

இவ்விஷயத்திலும் இவர் மோதிலாலைக் காட்டிலும் நல்ல நிலையிலிருக்கிறார். மோதிலால் தன் எதிரிகளை முற்றிலும் வெறுப்புடனும் அலட்சியமாகவும் பார்ப் பார். ஆனால் ராஜாஜீ வெற்றியடைந்தாலும் எதிரியை ஆத்திரமடைய சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. இயற்கை யாகவே அவர் அடக்க முள்ளவரல்ல, ஆயினும் பழக் கத்தாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டும் அவர் இந்த அடக்கத்தை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்.

எதிரியிடம் காட்டும் இந்த அடக்கமும் அவருடைய போர்க்கலேயின் ஒரு அங்கமாகும்.

அவருடைய மனேபலத்திற்கும் தன்னடக்கத்திற்கும் உதாரணமான ஒரு சம்பவம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.

ஒருமுறை அவருடைய கையில் டாக்டர் ரங்காச்சாரி யார் ஒரு ஆபரேஷன் செய்தார். அச்சமயம் டாக்டரின் உதவியாளர் குளோபாரம் கொடுப்பதற்கு வந்தார். ராஜாஜீ அதைத் தடுத்து, "குளோபாரம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை: அதில்லாமலேயே நான் சத்திர சிகிச்சையால் உண்டாகும் வலியையும் அந்தக் காட்சியையும் சகித்துக் கொள்ளுவேன்" என்ருர். சத்திர சிகிச்சையின்பொழுது உண்மையாகவே அவர் கலங்கவில்லே. இந்த மெலிந்த மனிதரின் மனேபலத்தைக் கண்டு டாக்டர் ரங்காச்சாரி பிரமித்துவிட்டார். இம் மனேபலத்துடன் கூடவே அவருக்கு வேலே செய்வதிலுள்ள ஆர்வமும் அற்புதமானது.

அவர் சளேக்காமல் வேலேசெய்யும் ஊழியர். ஒரு காரியம் எடுத்தால் அதை முடித்துவிட்டே மூச்சு விடுவார்.

ஒருமுறை அவர் திருச்சியில் டாக்டர் ராஜனுடைய பங்களாவில் தங்கியிருந்தார். அவர் தகப்பனர் மிகவும் காயலாக இருப்பதாகவும் கடைசி நேரத்திற்குமுன் அவரைப் பார்க்க விரும்புவதாகவும் ஒரு தந்தி வந்தது. ராஜாஜீ அப்பொழுது ஏதோ முக்கியமான விஷய

மாகக் கடிதம் எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். தந்தியை வாங்கிப் படித்தார். பிறகு மடித்து வைத்து விட்டார். உணர்ச்சி மிகுந்த அவருடைய இளங் காரிய தரிசி அவருக்குத் தகப்பனுரிடமுள்ள அளவுகடந்த பக்தியை அறிந்தவர். மனமுருகிப்போய் செய்வ தறியாமல் நின்றிருந்தார். ராஜாஜீ அவரைப் பார்த்து 'கடவுள் விருப்பம் பலமானது : நாம் நமது வேலையை முடித்துக்கொண்டு ராத்திரி வண்டியில் வீட்டுக்குப் போகலாம்' என்று நிதானமாகச் சொன்னார். வண்டிக்குப் புறப்படும் நேரம்வரை மறுபடியும் பழைய ஆர்வத்தோடு வேலை செய்துகொண் டிருந்தார் !

எல்லாவற்றிற்கும் மேல் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது.

சேவை செய்வதற்கென்றே அவர் வாழ்க்கையின் சௌகரியங்களையும் அலங்காரங்களையும் முற்றிலும் தியாகம் செய்திருக்கிறார்.

இவ்விஷயத்தில் அவர் முற்றிலும் ஒரு சன்யாசி !

சென்னைப் பிரதம மந்திரியா யிருந்தபொழுதும் கூட அவருடைய எளிமை அப்படியே இருந்தது.

அவரிடம் அந்தணரின் துறவும் வைசியரின் வியாபாரப் பற்றும் இருக்கிறது.

இவ்விரண்டும் சேர்ந்து அவரைச் சாணக்யராக்கி விட்டது.

அவர் சென்னையின் பிரதம மந்திரிப்பதவி வகித்ததில் பெரிய தியாகம் செய்திருக்கிறார். அவர் அதற்குத் தயாராக இருக்கவில்லை. ஆனால் மாகாணத்தின் போட்டி தனிமையைவிட்டு வெளியே வரும்படி அவரைக் கட்டாயப்படுத்திவிட்டது.

இவ் விஷயங்களை எல்லாம் மனதிலிருத்திக்கொண்டு நாம் ராஜாஜீயைக் கவனித்தால் அவருடைய வாழ்க்கையில் தோன்றும் முரண்பாடு மறைந்துவிடுகிறது. போர்த் தந்திரத்தில் தொடர்ச்சியாக, சந்தர்ப்பத்தையும் நிலைமையையும் அனுசரித்து மாறுதல்கள் செய்துகொண்டே இருக்கிறார். ஆனால் இம் மாறுதல்களுக்கு அடியில் லட்சியத்தின் துருவ நட்சத்திரம் ஒன்றாகத்தான் இருக்கிறது.

அவருடைய முறையிலும் அவருடைய பேச்சிலும் அதிருப்தி கொள்ளும்போது மக்கள் ராஜாஜீ உணர்ச்சி வசப்பட்ட, அடிதடிக்குத் தயாராகவுள்ள தேசபக்தரல்ல என்பதை மறந்துவிடுகிறார்கள். அவர் இயற்கையிலே ஒரு தியாகி — கம்பீரம் மிகுந்த ஊழியர். ஆயினும் தன் சேவை சித்திபெறுவதைக் காண விரும்பும் — முற்றும் தேர்ந்த — பழுத்த ராஜதந்திரி ஆவார்.

உண்மையில் ராஜாஜீக்குள் தியாகமும் நல்ல சுபாவமும் ராஜ தந்திரமும் — விசித்திரமான திறமையும் இரண்டும் கலந்த ஒரு அற்புதக் கலப்பு இருக்கிறது. அவரைப் பின்பற்றுபவரொருவர் என்னிடம் சொன்ன, "ராஜாஜீக்குள் செயின்ட் பிரான்ஸிஸ் — சாணக்யன்

இருவரின் கலப்பு இருக்கிறது" என்ற வாக்யம் எனக்கு ஞாபகம் வருகிறது. ஆகையால்தான் சாதாரண மனிதன் பக்தியின் வசத்தால் அவரிடம் கவர்ச்சி கொள்ளும்பொழுது படித்தவன் அவருடைய தர்க்க சக்தியைக் கண்டு ஆச்சரியத்திலாழ்கிறான்.

ஒன்று நிச்சயம்.

இன்றைய இந்திய அரசியலில் புத்தி பலத்தாலும் சாதுரியத்தாலும் சித்தி பெற்றவர்கள் ராஜாஜீக்கு இணையாக வேறு எவருமில்லை.

இந்த ராஜதந்திரத்தோடு கூடவே அவரிடம் தன் உறுதியான நம்பிக்கைக்காகத் தனியாக நிற்கும் அற்புதமான நிச்சயமும் இருக்கிறது.

ஏதாவது ஒரு விஷயத்தைச் சரியானதென அவர் அறிந்துகொள்ளும்பொழுது அவ் விஷயத்திற்காகத் தோழர்கள் – சக ஊழியர்கள் இவர்களின் விரோதத்தைச் சகிக்கவும் தயாராகிவிடுகிறார்.

சமீபத்தில் முஸ்லீம் லீக் – காங்கிரஸ் ஒத்துழைப்புப் பிரச்னையில் (பாகிஸ்தான் பிரச்னை) அவருடைய இத் தோற்றத்தைக் கண்டோம். இவ்விஷயத்தில் அவர் காந்திஜீயை மிகவும் ஒத்திருக்கிறார். இந்த உறுதி அவருடைய வாழ்க்கையின் ஒரு அங்கம். கீதை, உபநிஷதங்களின் படிப்பு அதை இன்னும் உறுதியாக்கி விட்டது.

அவருடைய அறிவு விருப்பு வெறுப்பற்றது – அதில் எவ்விதமான பயமோ அன்றி சந்தேகமோ இல்லை.

சிந்திப்பதை எல்லாம் பகலின் பிரகாசம்போல் தெளிவாகச் சிந்திக்கிறார்.

ஜனங்களின் அறிவுலகு மேகங்களால் சூழப்பட்டிருக்கும்போது அவர் தன் வழியைத் தெளிவாகக் காண்கிறார்.

தன் எண்ணங்களை இவ்வளவு தெளிவாக வெளியிடுபவர் யாரும் காங்கிரஸில் இல்லை.

எந்த நிலைமையிலும் அவர் வியப்பு வயப்பட்டு திக்பிரமை அடைவதில்லை.

'என் அந்தராத்மா சத்திய வழியில் சரியான வழியைக் காட்டுகிறது' என்னும் காந்திஜீகூட ராஜாஜீயின் தர்க்கங்களுக்கு, தான் பதில் சொல்ல முடியாலிருப்பதைக் காண்கிறார்.

பர்தோலி – வர்தா இவ்விரண்டிடங்களின் முடிவுகள் இவருடைய தர்க்க சக்திக்கு உதாரணமானவைகள்.

அவருடைய பேச்சுக்கள் தர்க்கத்தின் படிப்படியான போக்கில் முத்து மணிகள் போல் கோர்க்கப்பட்டு, தெளிவாக வருவதால்தான் காந்திஜீயிடம் பரம விசுவாசம் கொண்டவர்கள் கூட சொல்லுகிறார்கள்.

"பக்தி காந்திஜீயின் பக்கமும் மூளை ராஜாஜீயின் பக்கமும் சாய்கிறது."

"க்ஷேமம் காந்திஜீயின் மார்க்கத்தால் தான் ஏற்படும்.

ஆனால்!

UNIVERSITY EXTENSION LIBRARY

UNIVERSITY LIBRARY
31 MAY 1957

தற்கால நிலையில் ராஜாஜீ சொல்லுவது தான் சரியா கப்படுகிறது" என்றும் சொல்லுகிறார்கள்.

வல்லபாய் படேல் ஒரு தடவை சொன்னார். "தெளிந்த அறிவும் சிக்கலற்ற சிந்தனா சக்தியும் கொண்ட ஒரு மனிதர் – ராஜாஜீ – எங்கள் கூட்டத்தில் இருக்கிறார்." காங்கிரஸின் நிர்மாணத்திட்டத்தை நிறைவேற்று வதிலும் ராஜாஜீயின் பங்குமிக அதிகமாகும்.

தீண்டாமை விலக்கில் அவர் சேவை புகழுதற்குரியது. கதர்ப் பிரசாரத்திலும் அவர், திருசெங்கோடு ஆச்ரமம் இன்னும் அநேக ஸ்தாபனங்களின் மூலமாக அநேக சேவைகள் புரிந்திருக்கிறார்.

மதுவிலக்குக் கிளர்ச்சியின் பிதாவே அவர்தான்!

ராஜாஜீ தமிழ்மொழியில் ஒரு பண்பட்ட எழுத்தாளர். அவருடைய கதைகள் நமக்கு டால்ஸ்டாயை ஞாபக மூட்டுகின்றன.

கீதை, உபநிஷதங்கள் முதலியவற்றிற்கு அவர் எழுதிய உரைகள் மிகப் பிரசித்தமானவை. மிகவும் விரும்பப் பட்டவையும் கூட.

ராஜாஜீ தர்மம் – வேதாந்தம் இவைகளைப் பற்றி எழுதுபவர் மட்டுமல்ல, வழிபடுபவருமாவார். அவை களைச் செய்கையில் காட்டும் தீரரும் கூட!

அவசியமெனத் தோன்றினால் எக்காலத்திலும் சம்பந் தமே இல்லாதிருந்தது போல் அரசியலை விட்டும் அவரால் விலக முடியும்.